



# சமூக நலன்
# மற்றும்
# மகளிர் உரிமைத் துறை

## மானியக் கோரிக்கை எண்.45

## அறிவிப்புகள்

## 2024 - 2025

**11. தனியாரால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள் மற்றும் பணிபுரியும் மகளிர் விடுதிகள் பதிவு மற்றும் உரிமம் பெறும் நடைமுறை, எளிய ஆளுமை (Simple Governance) திட்டம் மூலம் எளிதாக்கப்படும்.**

அரசின் அனைத்து சேவைகளும் பொதுமக்களை எளிதாகவும், சிறந்த முறையிலும் சென்றடைய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய நோக்கத்தை அடைய, புதிய திட்டமான எளிய ஆளுமை (Simple Governance) உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை முதியோர் இல்லம் மற்றும் பணிபுரியும் மகளிர் விடுதிகள் பதிவு செய்வதற்கு பல்வேறு விதிகள் மற்றும் நடைமுறைகள் கடைபிடிக்க வேண்டியுள்ளது. மேற்படி விடுதிகள் மற்றும் இல்லங்கள் நடத்தும் நிறுவனங்கள் பதிவு மற்றும் உரிமம் பெறுவதற்காக பல்வேறு அலுவலகங்களை நாடி தேவையான சான்றிதழ்கள் மற்றும் உரிமங்களை பெற வேண்டியுள்ளது. இதனால் கால விரயம் ஏற்படுகின்றது. இதனை தவிர்க்க, பணிபுரியும் மகளிர் விடுதிகள் மற்றும் முதியோர் இல்லங்களை பதிவுசெய்து, உரிமம் பெறுவதற்கு நிறுவனங்களின் சுய உறுதி சான்றுடன் தேவையான சில ஆவணங்களை

இணையதளத்தில் பதிவேற்றம் செய்து, பதிவு மற்றும் உரிமச் சான்று கணினி வழியாகவே பிறப்பிக்கப்படும். இத்திட்டம் மூலம் வெளிப்படைத்தன்மை அதிகரிக்கும். மேலும் பதிவு செய்தல் மற்றும் உரிமம் பெறுதல் வெகு எளிமையாக்கப்படும்.

**12. தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 54,449 குழந்தைகள் மையங்களுள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 5,590 குழந்தைகள் மையங்களை 55.90 கோடி ரூபாய் செலவினத்தில் சீர்மிகு குழந்தைகள் மையங்களாக தரம் உயர்த்தப்படும்.**

குழந்தைகள் மையத்திற்கு முன்பருவக் கல்வி பயில வருகை புரியும் குழந்தைகளுக்கு நல்ல பசுமையான காய்கறிகளை வழங்கும் பொருட்டு குழந்தைகள் மையங்களிலேயே ஊட்டச்சத்து காய்கறி தோட்டம் அமைப்பதுடன், விளையாட்டுகளுடன் கருத்து பரிமாற்ற முறையில் கல்வி கற்றலை மேம்படுத்திட, இணையதள வசதியுடன் கூடிய எல். இ. டி (LED) தொலைக்காட்சியும், குழந்தைகளுக்கு இதமான சூழலை உருவாக்கிட, மையத்தின் உட்கட்டமைப்பினை மேம்படுத்தி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு குடிநீர் சுத்திகரிப்பான் மற்றும் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு வசதி ஆகியனவற்றை ஏற்படுத்தி 5,590 குழந்தைகள் மையங்கள் 55.90 கோடி ரூபாய் செலவினத்தில் "சீர்மிகு குழந்தைகள் மையங்களாக" தரம் உயர்த்தப்படும்.

**13. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் சொந்த கட்டடங்களில் செயல்பட்டு வரும் 6,527 குழந்தைகள் மையங்களில் 11.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முறையான குடிநீர் வசதி ஏற்படுத்தப்படும்.**

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 54,449 குழந்தைகள் மையங்களில் 40,516 மையங்கள் சொந்த கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டுவரும் 6,527 மையங்களில் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கும், குழந்தைகளிடையே கைகழுவும் பழக்கத்தினை ஏற்படுத்துவதற்கும், முறையான குடிநீர் வசதி 11.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**14. குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் ஊட்டச்சத்து உணவு முறைகளை கண்காணிக்க 34.50 கோடி ரூபாய் செலவினத்தில் 29,236 அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு பழைய திறன் கைப்பேசிகளுக்கு பதிலாக புதிய திறன் கைப்பேசிகள் வழங்கப்படும்.**

கர்ப்பிணிப் பெண்களின் எடையினையும், 0-6 வயதுடைய குழந்தைகளின் வளர்ச்சியினையும், நிகழ்நேர கண்காணிப்பாக திறன் கைப்பேசியிலுள்ள செயலியின் மூலம் கண்காணித்து, ஊட்டச்சத்து குறைபாட்டினை குறைக்கும் நோக்கில் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட திறன் கைப்பேசிகளுக்கு பதிலாக 29,236 புதிய திறன் கைப்பேசிகள் 34.50 கோடி ரூபாய் செலவினத்தில் வழங்கப்படும்.

**15. குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் உயரம் மற்றும் எடையை அளவிடுவதற்கு குழந்தைகள் மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நான்கு வகையான வளர்ச்சிக் கண்காணிப்பு கருவிகள் 14.18 கோடி ரூபாய் செலவினத்தில் புதியதாக மாற்றி வழங்கப்படும்.**

கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 0 - 6 வயதுடைய குழந்தைகள் ஆகியோரின் உயரம் மற்றும் எடையினை ஒவ்வொரு மாதமும் அளவிட்டு தொடர்ந்து கண்காணித்து அவர்களது வளர்ச்சியினை உறுதிசெய்வதற்காக, குழந்தைகளின் நீளத்தை அளவிடும் கருவிகள் (Infantometer), குழந்தைகள் மற்றும் பெண்களின் உயரத்தை அளவிடும் கருவிகள் (Stadiometer), தாய் மற்றும் குழந்தை எடை எடுக்கும் கருவிகள் (Mother & Child Digital Weighing Scale), மற்றும் குழந்தைகளின் எடை கருவிகள் (Infant Weighing Scale) ஆகிய நான்கு வகையான கருவிகள் வழங்கப்பட்டு நான்கு ஆண்டுகளாவதால் அவற்றிற்கு பதிலாக புதிய கருவிகள் 14.18 கோடி ரூபாய் செலவினத்தில் குழந்தைகள் மையங்களுக்கு வழங்கப்படும்.